**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

| | |
|---|---|
| Case Number | CC No. 323/2017 |
| Deposition of witness | PW- 3 /LW- 3 |
| Name | திரு. அசோகன் |
| Father's Name | திரு. ராமசாமி |
| Village | கீழக்குறிச்சி |
| Taluk | பட்டுக்கோட்டை |
| Age | 57/2026 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 27th day of July 2026**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் செல்வி.கு.பரமேஸ்வரி Bench Clerk Grade III என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**

**(சாட்சியை நீதிமன்ற காவலர் திரு.வீரப்பிரகாஷ் 1990 என்பவர் அடையாளம் காட்டி நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டார்)**

**முதல் விசாரணை**

நான் தற்போது கீழக்குறிச்சி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். கீழக்குறிச்சி பஸ் ஸ்டாப்பில் சுமார் 10 வருடங்களுக்கு முன்பு ரவிச்சந்திரன், சதீஷ், மகேஷ் ஆகியோர் பிரவீன் என்பவருடன் சண்டை போட்டார்கள். சத்தம் கேட்டு அப்போது மேற்படி எதிரிகள் மூவரும் பிரவீன் குமாரை அடித்தார்கள். நான் சண்டையை விலக்கி அனுப்பி வைத்தேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால், சத்தம் கேட்டு வந்து பார்த்தேன். என்ன ஆயுதத்தால் அடித்தார்கள் என்றால் ஞாபகம் இல்லை. நான் எதையும் நேரடியாக பார்க்கவில்லை என்றாலும், புகார்தாரர் என் உறவினர் என்பதால் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை இல்லை</u>**

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஒம்/- திரு.த.சுதர்சன் M.A.,L.L.B.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை